10.07.2017

தினமணி

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2,687 கன அடியாக அதிகரிப்பு



**மேட்டூர்:** கர்நாடக மாநில அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்ட தண்ணீரால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் விரைந்து உயர்ந்து வருகிறது. கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் அந்த அணைகளிலிருந்து கடந்த மாதம் 30 ஆம் தேதி நொடிக்கு 3 ஆயிரத்து 365 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்ட நீர், சனிக்கிழமை பகல் 12 மணி முதல் மேட்டூர்அணைக்கு வரத் தொடங்கியது. பகல் 12 மணிக்கு 200 கன அடியாக இருந்த நீர்வரத்து, மாலை 4 மணிக்கு 1000 கனஅடியாக அதிகரித்தது. இது ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 1,912 கன அடியாக அதிகரித்தது. இன்று காலையில் மேலும் 750 கனஅடி அதிகரித்து, 2 ஆயிரத்து 687 கன அடியாக இருந்தது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மேகமாக உயர்ந்து வருகிறது.இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 21 புள்ளி பூஜ்ஜியம் 9 அடியாகவும், நீர் இருப்பு 4 புள்ளி 424 டிஎம்சியாகவும் உள்ளது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

**பசுமை மின்வழிப் பாதையால் தடையில்லா காற்றாலை மின்உற்பத்தி!**



பசுமை மின்வழிப்பாதை திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள புதிய துணை மின்நிலையங்களால், திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றாலைகளில் தடையில்லா மின் உற்பத்தி நடைபெறுகிறது. மேலும், புதிய தொழில்நுட்பங்களால் உற்பத்தியும் அதிகரித்து வருவதாக மின்வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவின் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களில் காற்றாலை மின்உற்பத்தி மிகவும் பிரதானமானதாக உள்ளது. இந்தியாவில் காற்றாலை மின்உற்பத்தி தமிழகம், மகாராஷ்டிரம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் அதிகமாக உள்ளது. மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு மின்சாரம் தயாரிப்பதை ஊக்குவிப்பதில் இந்தியாவிலுள்ள மற்ற மாநில மின்சார வாரியங்களைவிட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்தான் முன்னோடியாக விளங்குகிறது. பாலக்காட்டு கணவாய் (கோவை, திண்டுக்கல்), செங்கோட்டை கணவாய் (நெல்லை, தூத்துக்குடி), ஆரல்வாய்மொழி கணவாய் (நெல்லை, தூத்துக்குடி, ராமநாதபுரம்), கம்பன் கணவாய் (தேனி) ஆகியவை மிகவும் முக்கிய காற்றுக் கணவாய்களாக உள்ளன. இவற்றை அடிப்படையாகக்

கொண்டு காற்றாலைகள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. வழக்கமாக ஜூன் முதல் வாரம் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருவகாற்று அதிகம் வீசுவதால் காற்றாலை உற்பத்தி மிகவும் அதிகரிக்கும்.

நெல்லை மண்டலம்: காற்றாலை மின்உற்பத்தியில் இப்போது திருநெல்வேலி மண்டலத்தின் கீழ் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. 62 துணை மையங்கள் உள்ளன. இவற்றின் கீழ் 50 கே.வி. முதல் 2100 கே.வி. திறன் கொண்ட காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டின் நிலவரப்படி 4879 இணைப்புகளின் கீழ் 6,387 காற்றாலைகள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றின் மொத்த மின்உற்பத்தித் திறன் 4 ஆயிரத்து 162 மெகாவாட் ஆகும்.

சாதாரண நாள்களில் சுமார் 800 முதல் 1200 மெகாவாட் அளவும், தென்மேற்குப் பருவக்காற்று காலங்களில் 2100 முதல் 2500 மெகாட்வாட் மின்சாரமும் உற்பத்தியாகி வருகிறது. ஆரல்வாய்மொழி, செங்கோட்டை கணவாய்களைக் கொண்டு முப்பந்தல், ஆரல்வாய்மொழி, கயத்தாறு, ஆலங்குளம், தென்காசி சுற்றுவட்டார பகுதிகளில் காற்றாலைகள் அதிகளவில் நிறுவப்பட்டுள்ளன. இப்போது பருவக்காற்று காலம் என்பதால் திருநெல்வேலி மண்டலத்தில் இருந்து கடந்த இரு வாரங்களாக சராசரியாக 2100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகி வருகிறது. இன்னும் இரு வாரங்களில் இந்த சராசரி 2400 முதல் 2600 ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

பசுமை வழித்தடம்: இதுகுறித்து மின்வாரிய அதிகாரி ஒருவர் கூறியது: திருநெல்வேலி மண்டலத்தில் ஆண்டுதோறும் சீசன் காலங்களில் காற்றாலை மின்உற்பத்தி மிகவும் அதிகமாக இருக்கும். ஏற்கெனவே கூடங்குளம், தூத்துக்குடி அனல் மின்நிலையம் உள்ளிட்ட பல்வேறு மின்உற்பத்தி நிலையங்கள் உள்ளதால், வெளிமாவட்டங்களுக்கு காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரத்தை எடுத்துச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது. தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் நேரத்தில் அதனை தனியாரிடம் இருந்து மின்வாரியத்தால் வாங்க முடியாத சூழல் ஏற்பட்டதால், கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்புவரை காற்றாலைகளுக்கு ஒன்று முதல் 3 மணி நேரம் வரை கட்டாய மின்உற்பத்தி தடை அமலில் இருந்து வந்தது.

மத்திய அரசின் பசுமை மின்வழிப்பாதை திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கூடுதலாக துணை மின் நிலையங்களை அமைக்க நிதிஒதுக்கீடு பெறப்பட்டது. அதன்படி, ஏற்கெனவே கயத்தாறு, கமுதி ஆகிய பகுதிகளில் தலா 400 மெகாவாட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது தூத்துக்குடி மாவட்டம் தென்னம்பட்டியில் புதிதாக 400 மெகாவாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடர்ந்து வருகிறது. இதன்மூலம் வழிப்பாதை பிரச்னை முற்றிலும் மாறி முழுவீச்சில் காற்றாலை மின்உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர புதிய தொழில்நுட்பங்களால் காற்றாலைகளின் திறன் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இப்போது 2600 கே.வி. திறன் கொண்ட காற்றாலைகள்கூட சோதனை அடிப்படையில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடல் பகுதிகளில் 500 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறைவான அலை வேகம், புயல் உள்ளிட்ட பாதிப்புகள் குறைந்த பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுகள் முடுக்கிடப்பட்டுள்ளன. திருநெல்வேலி மண்டலத்திலும் இதற்கான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன என்றார் அவர்.

நிலம் கிடைப்பதில் சிக்கல்: இதுகுறித்து காற்றாலை உரிமையாளர் ஒருவர் கூறியது: திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் காற்றுக் கணவாய்ப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்கள் பலவற்றிலும் காற்றாலைகள் நிறுவப்பட்டுவிட்டன. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை மிகவும் லாபகரமானதாக இருந்ததால் பலரும் முதலீடு செய்தனர். ஆனால், இப்போது நில மதிப்பு உயர்வு காரணமாக காற்றாலைகள் புதிதாக நிறுவப்படுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் குறைந்தபட்சம் 4 ஏக்கர் நிலம் வாங்கி காற்றாலை நிறுவ பல கோடி செலவாகிறது. ஆனால், இப்போது மின்சாரத்தின் தேவை அதிகமிருந்தாலும் பல மாநிலங்களிலும் உற்பத்தி அதிகரித்துள்ளதால் ஒரு யூனிட் ரூ.4-க்கும் குறைவாகவே வாங்குகிறார்கள். ஆகவே, மரபுசாரா எரிசக்தித் துறையின் கீழ் இத்தகைய மின்உற்பத்தி திட்டங்களுக்கு புதிதாக மானியங்களை அறிவிக்க வேண்டியது அவசியம் என்றார்.

**குப்பைமேனி இலையின் சாற்றினை 30 மில்லி உட்கொள்ள வயிறு சுத்தமாகும், கோழையை அகற்றும், வயிற்றுப்புழுக்களை கொல்லும்**



குப்பைமேனி இலையின் சாற்றினை 30 மில்லி உட்கொள்ள வயிறு சுத்தமாகும், கோழையை அகற்றும், வயிற்றுப்புழுக்களை கொல்லும்

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உர விற்பனைக்கு ஆதார்: 300 விற்பனையாளர்கள் ஓட்டம்**



உர மானியம் பெற ஆதார் எண் கட்டாயம் என மத்திய அரசு அறிவித்த பிறகு, ஆறு மாவட்டங்களில், 300 விற்பனையாளர்கள் தங்கள் உரிமத்தை புதுப்பிக்காமல் விட்டு விட்டனர்.

ரூ.70,000 கோடி மானியம்

மத்திய அரசு உர மானியத்திற்கு பல ஆயிரம் கோடி செலவிடுகிறது. 2017 - 18 ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் உர மானியத்திற்கு, 70 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உர மானியத்தை பலரும் தவறாக பயன்படுத்துவதாக பல புகார்கள் வந்தன. இதையடுத்து மொபைல் போனில் செயல்படும் உர நிர்வாக சிஸ்டம் - எம்.எப்.எம்.எஸ்., என்ற திட்டத்தையும், உர வினியோகத்திற்கு ஆதார் எண் கட்டாயம் என்ற திட்டத்தையும் மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. இதில் உர வினியோகத்திற்கு ஆதார் எண் கட்டாயம் என்ற திட்டம், கடந்த ஆண்டு மார்ச் மாதம், 16 மாவட்டங்களிலும், கடந்த ஜனவரியில், மேலும் மூன்று மாவட்டங்களிலும் பரிசோதனை முறையில் அமல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின்படி விற்பனையாளர்கள் உரத்தை விவசாயிகளுக்கு விற்பனை செய்த பிறகே உர மானிய தொகை, உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும். 'பாயின்ட் ஆப் சேல்' கருவி மூலம், விவசாயின் ஆதார் எண் பதிவு செய்யப்பட்டு உறுதி செய்யப்படும்.

நிதி ஆயோக் ஆய்வு

இந்த இரு திட்டங்களும் எப்படி செயல்படுகிறது என்பதை நிதி ஆயோக் அமைப்பு ஆய்வு செய்ய விரும்பியது. இப்பணியில், 'மைக்ரோசேவ்' என்ற நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டது. அந்த நிறுவனம் நடத்திய ஆய்வின்படி, ராஜஸ்தான் பாலி மாவட்டத்தில், 31; மத்திய பிரதேசத்தின் ஹோசன்காபாத் மாவட்டத்தில், 51; தெலுங்கானாவின் ரங்கரெட்டி மாவட்டத்தில், 1 - ஆந்திராவின் மேற்கு கோதாவிரி மாவட்டத்தில், 50; கிருஷ்ணா மாவட்டத்தில், 131; இமாச்சல பிரதேசத்தின் உனா மாவட்டத்தில் 35 விற்பனையாளர்கள் தங்கள் உரிமத்தை புதுப்பிக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது. எனினும், விவசாய பணி தீவிரமாக இருக்கும் போது, தினமும் 300 முதல், 400

விவசாயிகள் உரம் வாங்க வருவர். அவர்களிடம் ஆதார் எண் பெற்று அதை உறுதி செய்து அதன் பின், உரம் விற்பனை என்பது காலதாமதத்தை ஏற்படுத்தும் என விற்பனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## ஏரிக்கு வராமல் வீணாகும் மழைநீர்: பெரமனூர், நத்தமேடு விவசாயிகள் வேதனை

ஜருகுமலை ஓடை சீரழிந்து கிடப்பதால், சந்தியூர் ஆட்டையாம்பட்டி ஏரிக்கு மழைநீர் வராமல் வீணாகிறது என, விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

பனமரத்துப்பட்டி, ச.ஆ.பெரமனூரில், 60 ஏக்கரில், சந்தியூர் ஆட்டையாம்பட்டி ஏரி உள்ளது. ஜருகுமலை தொடரில் பெய்யும் மழைநீர், கோம்பைக்காடு வழியாக, ஏரிக்கு வரும். ஆனால், ஜருகுமலை ஓடை பராமரிப்பின்றி உள்ளதால், மழைநீர் ஏரிக்கு செல்வதில் தடை உள்ளது. இதுகுறித்து, பெரமனூர், சந்தியூர் ஆட்டையாம்பட்டி, நத்தமேடு பகுதி விவசாயிகள் கூறியதாவது: ஓடையின் கரை அழிந்து, அகலம் குறைந்து குறுகி உள்ளது. அதில், மரம், செடி, கொடிகள் படர்ந்து, புதர் மண்டி கிடக்கிறது. ஒண்டிக்கடையில், ஓடையை அழித்து, தார்ச்சாலை அமைத்துள்ளனர். அங்கு, மழைநீர் செல்ல, ஐந்து அடி அகலத்தில் குறுகிய பாதை விடப்பட்டுள்ளது. அப்பாதை புதர் மண்டி கிடப்பதால், மழைநீர் தடம் மாறி, அருகே இருக்கும் வயல் பகுதியில் ஓடி வீணாகிறது. சேலம் - பனமரத்துப்பட்டி சாலையில் உள்ள குறுகிய பாலம், மண் மூடி கிடப்பதால், அடிக்கடி அடைப்பு ஏற்படுகிறது. அதனால், மழைநீர் ஓடையில் செல்லாமல், அருகே உள்ள வயலில் புகுந்து வீணாகிறது. அந்த நீர், வரப்புகளை உடைத்து, மண் அரிப்பு ஏற்படுத்தி, சேதத்தை உண்டாக்குகிறது. சமீபத்தில், மலை பகுதியில் கனமழை பெய்தும், ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. ஓடையை சீரமைக்காததால், மழைநீரை ஏரியில் சேமிக்க முடியாத நிலை உள்ளது. மழைநீர் ஓடையை தூர்வாரி சீரமைக்க வேண்டும். இவ்வாறு கூறினர்.

## மாம்பழம் இல்லாத மாங்கனி கண்காட்சி: வியாபார நோக்கில் நடப்பதாக குற்றச்சாட்டு

கிருஷ்ணகிரியில், மாம்பழ ரகங்கள் இல்லாத மாங்கனி கண்காட்சி நடத்தப்படுவதாக, பல்வேறு தரப்பினரும் புகார் தெரிவித்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மா சாகுபடி விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில், அகில இந்திய மாங்கனி கண்காட்சி, ஆண்டுதோறும் நடத்தப்படும். அப்போது, சிறப்பான மாங்கனி ரகங்கள், மா உற்பத்தி கருத்தரங்கு, தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வகுப்பு ஆகியன நடக்கும். நடப்பாண்டு, 25வது கண்காட்சியில், பெயரளவில் மட்டுமே மாங்கனி உள்ளதாக, விவசாயிகளும், பொதுமக்களும் குற்றம்சாட்டி வருகின்றனர். சில அரங்குகள், மாங்கனி ரகங்கள் இல்லாமல் வெறிச்சோடி காணப்படுகிறது. வரும், 17, வரை, கண்காட்சி நடக்கும் என்பதால், ஆர்வத்துடன் வரும் மக்கள், ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இதுகுறித்து, தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ராமக்கவுண்டர் கூறியதாவது: மா விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் துவங்கப்பட்ட மாங்கனி கண்காட்சி, தற்போது, பொருட்காட்சி அரங்கு போல் உள்ளது. கண்காட்சியில் மாங்கனிகளே இல்லை. இதனால், விவசாயிகளுக்கு எவ்வித பயனும் இல்லை. கண்காட்சியை, முழுக்க முழுக்க வியாபார நோக்கில் மட்டுமே அரசு நடத்தி வருகிறது. நுழைவுக் கட்டணமாக, ஒருவருக்கு, பத்து ரூபாய்; டூவீலர் கட்டணம், பத்து ரூபாய்; காருக்கு, ஐம்பது ரூபாய் வசூலிக்கப்படுகிறது. கண்காட்சியின் உள்ளே விற்கப்படும் உணவு பண்டங்கள் ஒவ்வொன்றும், மூன்று மடங்கு விலையில் விற்பனை செய்கின்றனர். எனவே, வரும் காலங்களில், மா விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பயனுள்ள வகையில், மாங்கனி விழாவை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தேங்காய் டன்னுக்கு ரூ.200 விலை வீழ்ச்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அடுத்த எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று தேங்காய் ஏலம் நடந்தது. இதில், 30 ஆயிரத்து,

415 எண்ணிக்கையில், 8,598 கிலோ தேங்காய் வரத்தானது. ஒரு டன் அதிகபட்சமாக, 24 ஆயிரத்து, 690 ரூபாய், குறைந்தபட்சமாக, 17 ஆயிரத்து, 100 ரூபாய் என, ஏலம் போனது. ஒரு டன் சராசரியாக, 21 ஆயிரத்து, 310 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், ஒரு லட்சத்து, 83 ஆயிரத்து, 232 ரூபாய்க்கு தேங்காய் வர்த்தகம் நடந்தது. இதில், 47 விவசாயிகள் பயனடைந்தனர். கடந்த வாரத்தை விட, டன்னுக்கு, 200 ரூபாய் விலை குறைந்து காணப்பட்டது.

**வாழைக்கு விலையில்லை - கவலையில் விவசாயிகள்**

நேந்திரன் வாழை காய்களுக்கு போதியவிலை கிடைக்காததால், விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைந்துள்ளனர்.கூடலூார், பந்தலுார்பகுதிகள், கேரளா மாநிலம் வயநாடு மாவட்டத்தை ஒட்டி அமைந்துள்ளதால், மலை விளைபொருட்கள் மட்டுமின்றி, நேந்திரன் வாழைவிவசாயமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இங்கு சதுப்பு நிலப்பகுதிகளில் நேந்திரன் வாழை விவசாயம் மேற்கொள்ளும் நிலையில், இதற்காக குத்தகைக்கு நிலங்கள் பெற்றும்,சொந்த நிலங்களிலும்பலரும் சுய வேலை வாய்ப்பாக இந்தவிவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே பலன்தரும்நேந்திரன் வாழை விவசாயத்தில், அதிகளவிலான விவசாயிகள், இளைஞர்கள் ஈடுபட்டுள்ள நிலையில், கோவை, பாலக்காடு, பெங்களூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது. இங்கு சிப்ஸ் தயாரிக்க கொண்டு செல்லப்படுகிறது. விலையில் சரிவு... கடந்த ஆண்டு இந்த பருவத்தில் நன்கு முற்றிய வாழை காய்கள் கிலோவுக்கு, 58 ரூபாய் விலையாக கிடைத்தது. ஆனால், நடப்பு ஆண்டில், 32 ரூபாய் வரை விலையாக கிடைத்த நிலையில், திடீரென 23 ரூபாயாக விலை குறைந்துள்ளது. ஜி.எஸ்.டி. வரியால், பாக்கெட்டுக்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் சிப்ஸ்களுக்கு கூடுதல் வரி என்பதால், சிப்ஸ் தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், நேந்திரன் வாழைக்காய் வாங்குவதற்கு மறுத்து வருவதால், விலை குறைந்துள்ளது.

நல்ல விலை கிடைக்கும் என்று கருதி, கடன் வாங்கி நேந்திரன் வாழை விவசாயத்தில் ஈடுபட்ட பலரும், நஷ்டத்திற்கு உள்ளாகி, விவசாயத்தை கைவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகள் கூறுகையில்,'கூடலுார் பகுதியில், தோட்ட கலைத்துறையினர் நேந்திரன் வாழை கொள்முதல் கிடங்கு அமைத்து, கொள்முதல் செய்தால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் பாதுகாக்க இயலும்' என்றனர்.

**கூடலூரில் அழிவை நோக்கி நெல் விவசாயம் - அரசு ஊக்கப்படுத்தினால் காப்பாற்ற முடியும்**

கூடலுார், புளியாம்பாறை பகுதியில், அழிவை நோக்கி செல்லும், நெல் விவசாயத்தை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூடலுாரில் மலைப் பகுதிகளில், நீண்ட காலம் பயன்தரும் தேயிலை, காபி, குறுமிளகு, ஏலம், கிராம்பு, பாக்கு போன்ற பயிர்களும்; வயல்களில் குறுகிய கால பயன்தரும், நெல் மற்றும் காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர். புளியாம்பாறை பகுதியில் ஒரு காலத்தில், 200 ஏக்கர் பரப்பளவில் இருபோகம் நெல் பயிரிட்டனர். காலநிலை மாற்றத்தால் கடந்த பல ஆண்டுகளாக பருவமழையில் நெல்லும்; கோடையில் பாகற்காய், பஜ்ஜி மிளகாய், பூசணி, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் பயிரிட்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டு களாக இதில், எதிர்பார்த்த வருவாய் கிடைக்காததால், விவசாயிகள் ஓராண்டு பயிரான நேந்திர வாழை, இஞ்சியை பயிரிட துவங்கினர். தொடர்ந்து, இவைகளின் பரப்பளவு அதிகரித்தது; நெல், காய்கறி விவசாயத்தின் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருகிறது. தற்போது, வீட்டு தேவைக்கு மட்டும், சிறிய அளவில் நெல் பயிரிட்டு அறுவடை செய்து பயன்படுத்தி வருகின்றனர். இந்த மாற்றம் காரணமாக, நெல் விவசாயத்தின் பரப்பளவு, 15 ஏக்கருக்கு குறைவாக சுருங்கி விட்டது. இந்நிலையில், கடந்த ஆண்டு போன்று, நடப்பு ஆண்டிலும், பருவமழை ஏமாற்றி வருவதால், வீட்டு தேவைக்கான நெல் பயிரிடும் பணியை துவங்காமல், ஆடி மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர். இதே நிலை தொடர்ந்தால், நெல் விவசாயம், அழிவை நோக்கி செல்வதை தடுக்க முடியாது.

எதிர்காலத்தில், நெல் விவசாயம் என்பது, வரலாற்று நிகழ்வாக மாறி விடும். எனவே, அரசு விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை வழங்கி, பாரம்பரிய நெல் விவசாயத்தையும் பாதுகாக்க வேண்டும்.

விவசாயி மோகன்

கூறுகையில், "எங்கள் முன்னோர்கள், இரு போகம் நெல் பயிரிட்டனர். காலநிலை மாற்றம், கோடையில் ஏற்பட்ட தண்ணீர் பற்றாகுறையினால், கடந்த, 25 ஆண்டுகளாக பருவமழையில் நெல்லும்; கோடையில் காய்கறியும் பயிரிட்டு வருகிறோம்.

இடுபொருள்கள் விலை உயர்வு, கூலி ஆட்கள் தட்டுப்பாடு மற்றும் கூலி உயர்வு, குறைந்த வருவாய் போன்ற காரணங்களால், தற்போது, நேந்திர வாழை, இஞ்சி அதிகளவில் பயிரிட்டு வருகிறோம். வீட்டு தேவைக்கு மட்டும், நெல் பயிரிடுகிறோம்," என்றார்.

**சின்ன வெங்காயம் விலை வரத்து அதிகரிப்பால் சரிவு**

சின்ன வெங்காயம் அறுவடை துவங்கியுள்ளதால், வரத்து அதிகரித்துள்ளது. இதனால், இரண்டு மாதங்களுக்கு பின், சின்ன வெங்காயம் விலை சரியத்துவங்கியுள்ளது.

கடும் வறட்சி காரணமாக, தமிழகம் முழுவதும், ஒரு கிலோ சின்ன வெங்காயம், 100 முதல், 130 ரூபாய் வரை விற்றது. இதனால், பொதுமக்கள், 25 ரூபாய் முதல், 30 ரூபாய் வரை விற்ற பெரிய வெங்காயத்தை அதிகளவில் வாங்கி பயன்படுத்தினர். இந்நிலையில், நேற்று கரூர் உழவர் சந்தை, காமராஜ் தினசரி மார்க்கெட்டுகளில், சின்ன வெங்காயத்தின் விலை கணிசமாக குறைந்து, 130 ரூபாய் வரை விற்ற முதல்தரம், 90 ரூபாய்க்கும், 90 ரூபாய்க்கு விற்ற இரண்டாம் தரம், 70 ரூபாய்க்கும் விற்றது. இதுகுறித்து, கரூர் உழவர் சந்தை வியாபாரிகள் கூறியதாவது: மதுரை, தேனி மாவட்டங்களில், 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் சின்ன வெங்காயம் அறுவடை கடந்த வாரம் துவங்கியது. அதை காயவைத்து பதப்படுத்தப்பட்டு, விற்பனைக்கு வர துவங்கியுள்ளது. இதனால், சின்ன வெங்காயம் விலை சற்று குறைய துவங்கியுள்ளது. திண்டுக்கல்,

ஒட்டன்சத்திரம் பகுதியில் இருந்து, சின்ன வெங்காயம் வரும் பட்சத்தில், மேலும் விலை குறைய வாய்ப்புண்டு. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மழை எதிரொலி: விவசாயிகள் மகிழ்ச்சி**

கிருஷ்ணராயபுரம், ஒன்றிய கிராமங்களில், தொடர்ந்து மிதமான மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிருஷ்ணராயபுரம், ஒன்றிய பகுதிகளான பழையஜெயங்கொண்டம், கோவக்குளம், பிச்சம்பட்டி, சேங்கல், மாயனூர், திருக்காம்புலியூர், மகாதானபுரம் ஆகிய பகுதிகளில், கடந்த, இரண்டு நாட்களாக மிதமான மழை பெய்து வருகிறது. இரவு நேரங்களில், காற்றின் வேகத்தால், பல இடங்களில் கன மழை பெய்து வருகிறது. இதனால், கிருஷ்ணராயபுரம் ஒன்றிய கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 'இந்த மழையால், கால்நடை தீவன பற்றாக்குறையை சமாளிக்க முடியும்' என, அவர்கள் கூறினர்.

**மாயனூர் தடுப்பணையில் நீர் மேலாண்மை: டெல்டா பாசன விவசாயிகள் வலியுறுத்தல்**

மாயனூர் கதவணை பகுதியில், நீர் மேலாண்மை திட்டத்தை மேற்கொள்ள, டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்க நிர்வாகி கோரிக்கை விடுத்துள்ளார்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த, மாயனூர் காவிரி ஆற்றின் குறுக்கே, கட்டளை கதவணை கட்டப்பட்டது. இதன் மூலம், மாயனூர் முதல், முக்கொம்பு மேற்கு பகுதி வரை, கட்டளை வடக்கரை வாய்க்கால், தென்கரை வாய்க்கால், புதிய வாய்க்கால் பகுதியில், குடிநீர் மற்றும் விவசாய தேவை பூர்த்தி செய்யப்படும். ஆனால், தற்போது, தடுப்பணையில் தண்ணீர் இல்லாததால், கிருஷ்ணராயபுரம் சுற்று வட்டார பகுதிகளில், குடிநீர் மற்றும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, காவிரி நீர் டெல்டா பாசன விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் மகாதானபுரம் ராஜாராம் கூறியதாவது: காவிரி உற்பத்தியாகும் இடங்களில், போதுமான அளவில் பருவமழை பெய்யாததால், மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரவில்லை. இதனால், 1.5 டி.எம்.சி., வரை தண்ணீர் தேக்கி வைக்கும் வகையில் கட்டப்பட்ட, மாயனூர்

தடுப்பணை வறண்டு காணப்படுகிறது. மழைநீர் மற்றும் மேட்டூர் அணையில் இருந்து வரும் காவிரி நீர் முழுவதும், தடுப்பணையில் தேக்கி வைக்கும் போது, குடிநீர் மற்றும் விவசாயம் காக்கப்படும். எனவே, மாநில அரசு நீர் மேலாண்மை திட்டத்தை, தடுப்பணை பகுதி யில் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**சில்லரை விலையில் ஒரு கிலோ சாம்பார் வெங்காயம் ரூ.140 வரை விற்பனை**



சில்லரை விலையில் ஒரு கிலோ சாம்பார் வெங்காயம் ரூ.140 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் சாம்பார் வெங்காயத்தை உரிக்காமலேயே இல்லத்தரசிகளுக்கு கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது.

இப்போது கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து அதிகரிக்கத்தொடங்கியுள்ளதால் கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் காய்கறிகளின் விலை குறைய தொடங்கியுள்ளது. அதே சமயத்தில் தக்காளி, சாம்பார் வெங்காயம் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை.

கண்ணீர்

கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ சாம்பார் வெங்காயம் ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை சில்லரை வியாபாரிகள் ரூ.140 வரையிலும் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் இல்லத்தரசிகளுக்கு, சாம்பார் வெங்காயத்தை உரிக்காமலேயே கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது.

இன்னும் 2 வாரத்துக்குள், அண்டை மாநிலங்களில் இருந்து காய்கறிகள் வந்தால் தக்காளி மற்றும் சாம்பார் வெங்காயத்தின் விலை குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறைவதற்கு வாய்ப்பு

இதுகுறித்து கோயம்பேடு காய், கனி மற்றும் மலர் வியாபாரிகள் நலச்சங்கத்தின் துணை தலைவர் சுகுமார் கூறியதாவது:-

கோயம்பேடு மொத்த மார்க்கெட்டுக்கு நாள் ஒன்றுக்கு வரும் காய்கறி லோடுகளின் எண்ணிக்கை 250-ல் இருந்து, தற்போது 300 ஆக அதிகரித்துள்ளது. இதனால் கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் ஒட்டுமொத்தமாக 10 முதல் 20 சதவீதம் வரையிலும் காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. முகூர்த்த காலம் முடிவடைந்ததும், சந்தைக்கு வரத்து அதிகரித்ததுமே காய்கறிகளின் விலை குறைவதற்கு பிரதான காரணம் ஆகும்.

ஆந்திரா, கர்நாடகாவில் பெய்த கன மழையின் காரணமாக, காய்கறிகள் நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகத்தில் இருந்து இன்னும் 15 நாட்களில் புதிதாக பயிரிடப்பட்ட காய்கறிகள் சந்தைக்கு வரும். அப்போது காய்கறிகளின் விலை மேலும் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. தக்காளி மற்றும் சாம்பார் வெங்காயம் ஆகியவற்றின் விலை புதிய காய்கறிகளின் வரவை பொறுத்து குறைய வாய்ப்பு உள்ளது.

காய்கறிகள் விலை விவரம்

நேற்றைய நிலவரப்படி காய்கறிகளின் மொத்த விலை விவரம் (ஒரு கிலோ) வருமாறு:- (கடந்தவார விலை அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)
பல்லாரி வெங்காயம் ரூ.13 முதல் ரூ.18 வரை (ரூ.15 முதல் ரூ.20 வரை), உருளைக்கிழங்கு ரூ.17 முதல் ரூ.20 வரை (மாற்றம் இல்லை), சாம்பார் வெங்காயம் ரூ.70 முதல் ரூ.80 வரை (ரூ.80 முதல் ரூ.90 வரை), தக்காளி ரூ.40 முதல் ரூ.50 வரை (மாற்றம் இல்லை), அவரைக்காய் ரூ.25 முதல் ரூ.40 வரை (ரூ.40 முதல் ரூ.50 வரை), பீன்ஸ் ரூ.30 முதல் ரூ.60 வரை (ரூ.45 முதல் ரூ.70 வரை), கேரட் ரூ.40 முதல் ரூ.60 வரை (ரூ.60 முதல் ரூ.80 வரை), கத்திரிக்காய் ரூ.15 முதல் ரூ.30 வரை (ரூ.20 முதல் ரூ.40 வரை),
வெண்டைக்காய் ரூ.20 முதல் ரூ.30 வரை (ரூ.30 முதல் ரூ.40 வரை), புடலங்காய் ரூ.20 முதல் ரூ.25 வரை (ரூ.30 முதல் ரூ.40 வரை), கோவக்காய் ரூ.10 முதல் ரூ.20 வரை (மாற்றம் இல்லை), பீட்ரூட் ரூ.20 முதல் ரூ.25 வரை (ரூ.25 முதல் ரூ.35 வரை), சவ்சவ் ரூ.20 முதல் ரூ.25 வரை (ரூ.25 முதல் ரூ.35 வரை), பாகற்காய் ரூ.25 முதல் ரூ.35 வரை (ரூ.30 முதல் ரூ.40 வரை), சேனைக்கிழங்கு ரூ.40 முதல் ரூ.45 வரை (ரூ.45 முதல் ரூ.50 வரை), சேப்பங்கிழங்கு ரூ.20 முதல் ரூ.30 வரை (ரூ.25 முதல் ரூ.35 வரை), முருங்கைக்காய் ரூ.30 முதல் ரூ.50 வரை (ரூ.20 முதல் ரூ.30 வரை), தேங்காய் (ஒன்று) ரூ.12 முதல் ரூ.20 வரை (ரூ.15 முதல் ரூ.22 வரை), வாழைக்காய் (ஒன்று) ரூ.7 முதல் ரூ.12 வரை.
இவ்வாறு அவர் கூறினார்.

**தனியார் தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு வார விலை நிர்ணயம் செய்யாமல் முன்பணம் வழங்கியதால் விவசாயிகள் கவலை**



நீலகிரி மாவட்டத்தில் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருவதாக புள்ளி விவரம் கூறுகிறது. சிறு விவசாயிகள் அவ்வப்போது தேயிலை விலைவீழ்ச்சியின் காரணமாக கடுமையாக பாதிப்படைந்து வருகிறார்கள். தேயிலை என்பது வணிகப்பொருள் என்பதால் இதற்கு விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசு தயக்கம் காட்டி வருகிறது. இருப்பினும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டு என்பது சிறு விவசாயிகளின் முதன்மையான கோரிக்கையாக உள்ளது.

இந்த நிலையில் மத்திய அரசின் சரக்கு மற்றும் சேவை வரி அறிவிப்பு காரணமாக தேயிலை ஏல மையத்தில் தேயிலைத்தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்துள்ளது. இதனால் பச்சை தேயிலையும் கடும் விலை வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தனியார் தேயிலை தொழிற்சாலை நிர்வாகங்கள் விவசாயிகள் வினியோகிக்கும் பச்சை தேயிலைக்கு வாரந்தோறும் சனிக்கிழமை வார விலையை நிர்ணயம் செய்து வழங்கி வருகிறது. குன்னூர் ஏல மையத்தில் தேயிலைத்தூள் வரலாறு காணாத வகையில் தேக்கம் அடைந்துள்ளதால் கடந்த 8–ந் தேதி தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு வார விலை நிர்ணயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வார விலை வழங்கும் 80 சதவீத தனியார் தேயிலை தொழிற்சாலைகள் ஒரு கிலோவுக்கு ரூ.8 முன்பணமாக வழங்கி உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனிடையே ஒரு சில தேயிலை தொழிற்சாலைகள் மட்டும் ‘பி–பிளஸ்’ வகை பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ.17 முதல் ரூ.18 வரை வரையும், ‘பி’ வகை பச்சை தேயிலை கிலோவுக்கு ரூ.13 என்றும் விலை நிர்ணயம் செய்துள்ளன. இருப்பினும், பெரும்பாலான சிறு விவசாயிகள் சாதாரண வகை பச்சை தேயிலையை தொழிற்சாலைக்கு வினியோகம் செய்து வருகிறார்கள். இந்த தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யாமல் கிலோவுக்கு ரூ.8 முன்பணம் வழங்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறும் போது, பச்சை தேயிலைக்கு வார விலை நிர்ணயம் செய்யாமல் முன்பணம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் ஏல மையத்தில் தேயிலைத்தூளை பெரிய வர்த்தகர் ஏலம் எடுக்காதது தான் என்று கூறப்படுகிறது. வர்த்தகர்கள் தேயிலைத்தூளை வாங்காமல் இருப்பது குறித்து தேயிலை வாரியம் தான் கேட்க வேண்டும். தேயிலைத்தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தால் தேயிலை விவசாயம் அழியும் அபாயம் உள்ளது. இதை தடுக்க தேயிலை வாரியம் அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.